செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்; விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அங] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது ஞு ஆடி மீ கச உ வெள்ளிக்கிழமை (30-7-1971) [இலக்கம்

## திருக்கேதீஸ்வரத் திருப்பணி

தொண்டர் நாள்தோறுந் துதிசெய அருள்செய்
கேதீச்சர மதுதானே.

— திரு சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் —
(திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபை ஸ்தாபகஉறுப்பினரும், முன்னாள் காரியதரிசியும், வழக்கறிஞரும், நொத்தாரிசும்.)

சைவத்தின் மேற்சமயம் வேறிலையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வமில்லெனு நான்மறைச் செம்பொரு
ளைவைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும் [ருள்வாய்
உய்வைத்தரச் செய்த நால்வர்பொற்றாள் எம்முயிர்த்துணையே

மானிடப்பிறவிக்குரியவர் இம்மைமறுமைப் பயன்களை அடைவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது சமயநெறியாகும். அதிலும் சைசமயத்தவர்களுக்கு மிக மிக அவசியமானது சிவபெருமானும் அவரது அருள் வாக்காகிய வேதசிவாகமங்களுமே. எமது ஈழத்திருநாடு சிவவழிபாட்டிலும் சிவாலய சேவையிலும் மிகத் தொன்மை வாய்ந்தது. யாழ்ப்பாணத்தைச் சார்ந்த தென்மராட்சிப் பகுதி சைவசமாசார சீலத்தையும் தமிழ்மரபு நெறியினையும் அன்றும் இன்றும் பேணிக்காத்து வருகின்றது.

இவ்வாறு சைவத் தமிழ்வாழ்வையே தமது மூச்சாக வளர்த்துவரும் தென்மராட்சி நன்மக்கள் சமூகம் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிப் பிரசாரக் கூட்டம் ஒன்றை தென்மராட்சி மேற்கு திருஞானசம்பந்தர் சபை ஆதரவில் நடத்துவது மிகப்பொருத்தமாகும்.

இற்றைக்கு ஏறக்குறைய 23 வருடங்களுக்கு முன் திருக்கேதீஸ்வரத்தில் திருப்பணி ஆரம்பித்த சமயம், சைவப்பெரியார் உயர்திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் முகாமையில் சாவகச்சேரியில் ஒரு பெரிய பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தொடர்பு காரணமாகத் தென்மராட்சி சைவத்தமிழ் மக்களிடத்தே திருக்கேதீஸ்வர ஆலயப் பற்றும், அவர்களது சைவப் பணி ஆர்வமும் வளர்வதாயிற்று. அவ்வாறே இந்தப் பிரசாரக் கூட்டமும் தென்மராட்சி மக்களை இன்னும் முனைந்து சிவப்பணி செய்யத் தூண்டும்வண்ணம் எல்லாம் வல்ல கேதீஸ்வரப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

"ஆலயந்தொழுவது சாலவும் நன்று" என்பது எங்கள் ஔவைப் பிராட்டியாரின் அருந்தமிழ்வாக்கு அதிலும், சைவ ஆலயந்தொழுவது சைவ மக்களுக்கு உரிமையானது. இன்னும், தேவாரப் பாடல்பெற்ற சிவாலயம் தொழுவது மிகப்பெரும் பயனைத் தருவதாகும். சைவ சமய குரவர்களில் இருவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் ஆகியவர்களின் தேவாரத் திருப்பாடல் பெற்றிருப்பது திருக்கேதீஸ்வரமாகும். மேலும், எங்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் "மாதோட்டத்திலே

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## திருக்கேதீச்சரத் தலத்துக்கு பஜனைப் பாதயாத்திரை

திருக்கேதீச்சரம் - கதிர்காமத் தீர்த்தத் திருவிழாவில் கலந்துகொள்ளும்பொருட்டு நல்லூரிலிருந்து ஈழத்திருத் தலப் பாதயாத்திரைக் குழுவினர் எதிர்வரும் 1-8-71 மாலை 5-00 மணிக்குப் பஜனைப் பாதயாத்திரையை ஆரம்பிக்கின்றார்கள். 16 ஆவது ஆண்டாகத் தொடர்ந்து நடைபெறும் இப் பாதயாத்திரை பூனரி, முழங்காவில், மார்க்கமாக வழமையான இடங்களில் தங்கி, புராணபடனம் விரிவுரைகள் இவைகள் நிகழ்த்திக் கொண்டு, கதிர்காமத்தீர்த்தத்தன்று கேதீச்சரம் சேர்வார்கள், பல இடங்களிலும் இவர்கள் தங்கிச்செல்வர்.



S.T.F

உ
திருச்சிற்றம்பலம்

அஞ்சுமுகந்தோன்றி
லாறுமுகந் தோன்றும்
வெஞ்ச மரந்தோன்றில்
வேல்தோன்றும்
—நெஞ்சில்
ஒருகா னினைக்கி
லிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார்
முன்.

திருச்சிற்றம்பலம்

## சிவஞானக் குமரேசா

### கதிர்காமத் தீர்த்தம் 6-8-71.

மாதர்வச மாயுற் றழல்வாரும்
மாதவ மெ ணுமற்
றிசிவாரும்
தீதகல வோதிப் பணியாரும்
தீநரக மீதிற்
றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசீலா
நாரியிரு வோரைப்
புணர் வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா
தோமில்கதிர் காமப்
பெருமாளே.

சிதம்பரம் ஞானாகாசமென்பர். ஞானாகாசத்தில் நடராசப்பெருமான் பஞ்சகிருத்திய நடமாடுவர். கதிர்காமமும் ஞானாகாசமாகும். முருகப்பெருமான் நடனமாடும் தலம். அடியார்களுக்கு அருவமாய், ஞான வடிவாக அருள் புரிகின்றார். 'நினைந் துருகு மடியா ருள்ளத்திற் றோன்றுவார். உள்ளுவாருள்ளத்தூறும் பெருமான். வஞ்சகமற்று வாழ்த்துவார் இதயத்தூறும் ஞானக் கரும்பு கதிரை வாழ் முருகனை எங்கள் இடர் தீர அஞ்சலி செய்வோமாக.

## முதலியார் குலசபாநாதன் ஒரு புண்ணிய ஆத்துமா

### பண்டிதமணி ஆசி

"புறச் சுத்தத்துடன் அகச் சுத்தத்தையும் வருவிக்கக்கூடிய சிறப்பு வாய்ந்தது நல்லூர்க் கந்தசாமி கோயில். நல்லூர்க் கந்தசாமி கோயில் உட்படப் புராதன சைவாலயங்கள் பற்றிய வரலாறுகளை எழுதக்கூடிய ஒரே ஒருவர் பெருமதிப்புக்குரிய முதலியார் திரு குலசபாநாதன் அவர்களே. நாவலர் மணி மண்டபத்தில் முதலியார் குலசபாநாதன் எழுதிய நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வரலாறு கொடியேற்ற நன்னாளில் வெளியிடுவது பொருத்தமாகும். திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்போன்ற புண்ணிய தலங்களின் வரலாறுகளையும் எழுதியுதவக்கூடிய வகையில் புண்ணிய ஆத்துமாவான முதலியார் திரு. குலசபாநாதனுக்கு இளமையோடுகூடிய உற்சாகத்தினை நல்லூர்க் கந்தன் அளிப்பாராக".

நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் முதலியார் திரு. குலசபாநாதனால் எழுதப்பெற்ற நல்லூர்க் கந்தசாமி கோயில் வரலாறு வெளியீட்டு வைபவத்தில் வாசிக்கப்பெற்ற ஆசிச் செய்தியில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார். பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபைக் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் குறித்த செய்தியை வாசித்தார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபைக் காரியதரிசி திரு. ம. ஸ்ரீகாந்தா பேசுகையில் "நல்லூர் என்றதும் நல்லூர் முருகன் ஞாபகமே எமக்கு வருகிறது: ஒரு ஞான பரம்பரை வாழ்ந்து சிறந்த பதி நல்லூராகும். நல்லூர் தேவஸ்தான அறக்காவலரின் உதவியுடன் முதலியார் குலசபாநாதன் மிகவும் நுண்ணிய கருத்துக்களை யடக்கி நல்லூர்க்கந்தசாமி கோயில் வரலாறு பற்றி எழுதி இருப்பது நாம் செய்த தவப்பயனே யாகும். முதலியார் குலசபாநாதன் அவர்கள் நீடூழி காலம் வாழ்ந்து இன்னும் அரிய பல சைவாலய வரலாற்று நூல்களை எழுதியுதவ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்" என்றார்.

யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் வித்துவான் க. சொக்கலிங்கம் உதவி அரசாங்க அதிபர் திரு. இ. முருகேசபிள்ளை, திரு எஸ். திருநீலகண்டர் உட்படப் பலர் பாராட்டுரை வழங்கியதை யடுத்து முதற் பிரதியை டாக்டர் நடராசா பெற்றுக்கொண்டார்.

முதலியார் திரு குலசபாநாதனின் நன்றியுரையை யடுத்து மெய்கண்டார் ஆதீனப் பண்ணிசைப் புலவர் திரு பீ. ஏ. எஸ். இராசசேகரன் திருமுறை ஓதினார்கள்.

உ

## சைவபரிபாலன சபை நால்வர் கோயிற் றிருப்பணிநிதி

| | ரூபா சதம் |
|---|---|
| முன் வரவு | 584-00 |
| திருவாளர்கள்: | |
| தா. சண்முகநாதன் | 25-00 |
| வி. கயிலாயபிள்ளை | 100-00 |
| ச. அம்மையப்பர் | 50-00 |
| அ. கந்தையா | 10-00 |
| மு. சி. சிற்றம்பலம் | 10-00 |
| ஆகக் கூடியது | 779-00 |

குறித்த திருப்பணி போதிய நிதி இன்னும் சேராமையினால் தாமதிக்கப்பெற்றிருக்கின்றது. அன்பர்கள் தங்கள் தங்களாலியன்ற நிதியை எமக்குக் காலதாமதமின்றி அனுப்பித் திருப்பணியைப் பூர்த்தி செய்ய உதவி புரிவார்களாக. நிதி உதவுகின்றவர்கள் பெயர் இந்துசாதனத்திற் பிரசுரிக்கப்பெறும்.

திருமதி. ம அருணசலம்
தனாதிகாரி
நால்வர் கோயிற்றிருப்பணிச்சபை
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம். 21-7-71

# நால்வர் திருக்கோயிலைப் பூர்த்தி செய்வதே அவருக்கு நாங்கள் புரியக்கூடிய கைம்மாறு

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

விரோதிகிருது ஷு ஆடி மீ கச-உ வெள்ளிக்கிழமை [1971]

## கல்வி முறையும் பொருளாதாரமும்

இலங்கையின் பொருளாதாரத்தைப் பரிசிலனை செய்து அதன் அபிவிருத்தியைப் பற்றி ஆலோசனை கூறவந்துள்ள ஐக்கிய நாட்டுசபையின் உறுப்பினர் பேராசிரியர் டட்லி சீயேர்ஸ் என்னும் பெரியார் இலங்கையில் காணப்படும் வேலையில்லாப் பிரச்சினைக்குரிய காரணங்களை நன்ருகப் படித்துத் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். 1970க்கும் 1980க்கும் இடையில் வருடமொன்றுக்கு 10 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் தேடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறதெனவும் அதற்காக இப்பொழுதுள்ள கல்விமுறை அவசியம் மாற்றப்படவேண்டுமெனவும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கக்கூடிய கல்வியளிக்கப்படவேண்டுமெனவும் புத்திமதி கூறியுள்ளனர். கழுத்துறைப் புனிதச் சிலுவைக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில், வணக்கத்துக்குரிய மதகுரு தோமஸ் கூறே அவர்களும் இவ்விஷயமாகக் கூறிய கருத்துக்களும் சிந்திக்கப்பட வேண்டியவை. அப்பெரியார் கூறிய பேச்சின் சாரம்:-

"இந்த நூற்ருண்டின் முற்பகுதியில் கல்லூரிகளில் பயின்ற மாணவர்கள் பரீட்சைகளில் சித்தி பெற்று அரசாங்கத்திலோ வியாபாரத் துறைகளிலோ மேலைத்தேச உடை தரித்துக் கண்ணியமான ஊதியம் பெற்றுக் கஷ்டமின்றி வாழ்வை இன்பமாகக் கழித்தார்கள். பெற்ருரும் திருப்தியடைந்து தங்கள் பிள்ளைகளுக்கு அவ்விதமான உத்தியோகத்தைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய கல்வியைப் பெற்றுக் கொடுப்பதில் கவனஞ் செலுத்தினர்கள். ஆனல் அந்தக் காலம் அகன்றுவிட்டது. அப்படியிருந்தபோதிலும உத்தியோகங்களைப் பெறக்கூடியகல்வி நம்பிக்கையுடன் பிள்ளைகளுக்கு இன்னும் ஊட்டப்படுகின்றது. பெற்ருரும் தங்கள் பிள்ளைகளுக்கு அத்தகைய உத்தியோகங்கள் இன்னும் கிடைக்குமென மனப்பால குடித்துப் பிள்ளைகளைப் படிப்பிக்கின்ருர்கள். அதனல் அவர்களுடைய பொருள் விரயமாவதொழியக் கருதிய பயன் கிடைக்கப்போவதில்லை. இந்த அவல நிலையைக் கல்வியதிபர்களும் உணர்ந்து கல்வி முறையில் மாற்றங்கள் செய்யத் தீர்மானஞ் செய்துள்ளனர். இம முயற்சி வரவேற்கத் தக்கதே. இம் மாற்றங்களைப் பொது சனங்களும மாணவர்களும் ஏற்றுக்கொண்டு அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும், அரசாங்க அலுவலகங்களில் கதிரை மேசையுடன் உட்கார்ந்து கடமையாற்றும் வாய்ப்பு முயற்கொம்பாகும. இளைஞர்கள் மலைப் பிரதேசங்களையும் காடுகளையும் திருத்திப் பயிர் செய்ய முன்வருதல வேண்டும். கலப்பை மண்வெட்டி பிடித்துக் கடினமாக உழைக்கவேண்டும். அவ்வித உழைப்பினல வேண்டிய செல்வத்தைப் பெறலாம். உழைத்து நாட்டின் வளத்தைப் பெருக்க மாணவர்கள் உறுதி கொள்ளல் வேண்டும். அவ்விதமாக உழைக்கத் தீர்மானஞ் செய்யும் மாணவர்களே நமது இலங்கா தேவியின் அரிய புதல்வராவார்கள்".

கல்வியதிகாரிகள் இக்கருத்துக்களைக் கவனித்து கல்விமுறையைத் திருத்தியமைத்து நாட்டின் வளத்தைப் பெருக்க முயலுகின்ருர்கள். மக்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தல அவசியமாகும.

### நாவலர் நல்வாக்கு

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம கடவுளை வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

## கதிர்காமத்தில் அன்னதானம்

கதிர்காமம் பொன்னம்பல சுவாமி மடத்தில் நடைபெற்றுவந்த அன்னதானம் சடையம்மா மடத்தில் நடைபெறுகின்றது. அடியார்கள் தங்குவதற்குரிய வசதிகளும் செய்யப்பெற்றிருக்கின்றன.

## அனுதாபத் தீர்மானம்

சைவபரிபாலன சபையின் செயலாளரும், செயல்வீரருமாகிய திரு. ஆ. தனபாலசிங்கம் அவர்கள் இறைவனடி சேர்ந்தமையையிட்டு 30-7-71ல் நடைபெற்ற சைவ பரிபாலன சபையாருடைய நிருவாக சபைக் கூட்டத்தில் நிறைவேற்றிய அனுதாபத் தீர்மானம்:

"இறைவனடி சேர்ந்த திரு. ஆ தனபாலசிங்கம் அவர்கள் சைவபரிபாலன சபையினுடைய அச்சாணியாக விளங்கினர். அன்னருடைய ஊக்கமும், முயற்சியும், பணமும், சைவபரிபாலன சபையில் நிறைய உள்ளன. அவர் சைவமக்களுக்கோர் எடுத்துக் காட்டாக, நற்சைவ மகனக வாழ்ந்தார், வாழ்ந்து காட்டினர். உள்ளும் புறமும் ஒரு தன்மையானகாட்சியுடையவர். அவர் ஓர் உண்மையான தமிழன், அத்துடன் சைவப் பழம். பொருளில் ஆசை இல்லாதவர், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன். அவரிடம் நிதிபெற்று வளர்ந்தோர்தொகைபலப்பல. அவர் மாந்தருக்குள் ஒரு மாணிக்கம். நல்ல தமிழனக சைவ வாழ்வு வாழ்ந்த ஓர் விலைமதிப்பற்ற ஒப்பற்ற மாணிக்கத்தை சைவ உலகமும், தமிழ்ச் சமுதாயமும் இழந்துவிட்டன. உயரிய பண்பாளன், தூய்மையான தொண்டன். அவர் பேசுபவரல்லர், செயல் வீரர்; மனம், தனம் இரண்டையுமே மக்களுக்கும் சிறப்பாக சைவபரிபாலன சபைக்கும் அர்ப்பணித்த பெரியார். அன்னர் சபையைக் காப்பாற்றிய வழியில் நாமும சபையைக் கட்டுக்கோப்பு குலையாமல் காத்து அன்னர் நிறைவேற்ற நினைத்து முனைந்த நாலவர் கோவிற் திருப்பணியைச் சிறப்புற நிறைவேற்றி முடிப்பதே நாம அப்பெரியாருக்குச் செய்யும் கைமாருகும். அன்னரது நினைவாக ஓர் மலர் வெளியிட வேண்டும்."

மேற்படி அனுதாபத் தீர்மானத்தை திரு. முதலியார் செ. முத்துத்தம்பி அவர்கள் முன்மொழிந்தார்கள். திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் வழிமொழிந்தார்கள். மற்றும், திருவாளர்கள்; சிவ. உ. சோமசேகரம, இ. செ. மன்மதராயன், மு. மயில்வாகனம் அவர்களும் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்தார்கள். இரு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## திருக்கேதீச்சரத் திருப்பணி

( 1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி )

திருக்கேதீஸ்வரமென்ன ஒரு தேன் பொந்து இருக்கிறது. அதனைத் தேடிக் கண்டுபிடித்து அனுபவிப்பது ஈழம் வாழ் சைவத் தமிழ்மக்களின் பெருங் கடனகும்" என்று அன்று கூறிவைத்தார். இன்று அந்தக் கனவு நனவாகி ஆலயம் உருவாகி வந்துகொண்டிருக்கிறது. மேற்படி ஆலயத்தில் மூலஸ்தானங்களாகிய சிவன், அம்மன் கோவில்கள் இனிமேல் கருங்கல் திருப்பணியாக நடைபெறவேண்டியிருக்கிறது.

இந்த மிகத்தூய திருப்பணியை நிறைவேற்ற முயற்சிப்பது சைவமக்களின் தனிப்பெருங் கடமையன்றோ!

ஈழம்வாழ் சைவ மக்களின் மனம் இக் காலத்தில் பல சிக்கல்களுக்கு உட்பட்டிருக்கிறது. சிவாலய வழிபாட்டினுலும், சிவாலயத் திருப்பணியை விரும்பிச் செய்வதனுலும், சிவ நினைப்பினுலும் அந்தச் சிக்கல்கள் யாவும் சூரியனைக் கண்ட பனிப்போல நீங்கிவிடுமென்பது நிச்சயமேயாம். இந்தப் பெரும்பேற்றை அடைவதற்குத் திருக்கேதீஸ்வர ஆலய சேவையும், திருப்பணி உதவியும், கௌரியம்பாள் சமேத கேதீஸ்வரர் திருவோலக்க நினைவும் ஏதுக்களாகும்.

## நல்லை. ஞானசம்பந்தர் ஆதீனத்தின் 5ம் ஆண்டுப்பூர்த்தி

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தின் ஐந்தாவது ஆண்டுப் பூர்த்தி விழாவும், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமி அவர்கள் துறவுபூண்டு ஐந்தாவது ஆண்டு நிறைவு பெறும் விழாவும் எதிர்வரும் 14-8-71 இல் சிறப்பாக நல்லை ஆதீனத்தில் நடைபெறவிருக்கிறது.

(நாயன்மார்கட்டு நிருபர்)

### இராமாயண விழா

கிழக்கு ஜாவா லபாந்தன் நகரத்தில் 30-8-71 தொடக்கம் இரு வாரங்களுக்கு இராமாயண விழா வழமைபோல நடைபெறும். இந்தியா, இலங்கை. நேர்பாளம், மலேஷியா, பர்மா, தைலன்ட், கம்போடிய முதலிய ஒன்பது நாடுகள் விழாவுக்கு கலைஞர்களையும் நடிகர்களையும் அனுப்பும்.

### பழமை பாடிச் ......

(3-ம் பக்கத்தின் வளர்ச்சி

புறங்காட்டாத் தீரம் மிகுந்தவர்கள்; ஆண்மை குன்ரு ஆற்றலுடையவர்கள்; தோள்வலி படைத்த சுத்த வீரர்; அவரது மரபிற் பிறந்த நான் எனது சாதியாரின் உயர்ச்சிக்காக முயலுவேன்; மிகப் பழமையான நாகரிகம் வாய்ந்த எனது சாதி ஏனைய சாதிகளிலும் பார்க்க உயர்ந்ததேயன்றி ஒருவாற்ருனும் குறைந்ததல்ல; நான் தமிழன், தெய்வத் தமிழ்நாட்டிற் பிறந்தவன், இந்நாட்டின் உயர்ச்சிக்காக உழைப்பதற்கே நான் பிறந்திருக்கின்றேன்; கம்பனையொத்த கவிவாணரும், கரிகாற்பெருவளத்தானைப்போன்ற திருவாளரும். வரையாது கொடுக்கும் வள்ளல்களும் தோன்றிய சாதி எனது சாதி; அவரது புகழினைப் பெருக்குவேனேயன்றி ஒருபோதுங் குறைக்கமாட்டேன்; தெய்வத்தமிழ்நாட்டிற்குரிய தெய்வமாகிய திருமுருகன் எனக்கு ஆண்மையையும், கல்வியையும், அறிவினையும் தந்தருளுவாராக" என்று அநுதினமும துதித்துவரும்படி நமது தெய்வக் குழந்தைகளுக்குத் தெரிவிப்போமாக.

"பழமை பாடிச் செழுமை தேடு"

(— பண்டித மயில்வாகனஞர் B, Sc )

### ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமகா சந்நிதானம் அவர்கள்

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுரம் ஆதீனத்தின் 25-ஆவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (விகாரி ஆண்டு ஆடி 18 ஆம் நாள்) ஆடி அமாவாசை புண்ணிய கால திருநாளன்று "மகாகயிலாய கிரியை" கண்டு தரிசித்து பேரானந்தம் எய்திய சிவ புண்ணிய திருநாளாகிய ஆடித் திங்கள் 6- ஆம் நாள் அமாவாசை புண்ணிய தினத்தன்ற "மகாகயிலாயக் காட்சி" யின் 12 ஆவது ஆண்டு விழா ஆதீனத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ ல ஸ்ரீ கயிலை குருமணிகள், பூசை கட்டில் காலை — மாலையும் குருவார மௌன நோன்புடன் "கயிலாய திருவுருவப் படத்திற்கு" பிரபல பண்ணிசைவாணர்களின் கயிலாயத் தேவாரப் பாராயணங்களுடனும், மங்கள இசைகளுடனும், விசேஷ ஆராதனைகள நடத்தி வழிபாடுகள் செய்துகொண்டு பகத கோடிகளுக்கு அருள்பிரசாதங்கள் வழங்கினுர்கள். பகலில் மகேஸ்வர பூசை நடைபெற்றது.

பண்ணிசைவாணர்களின் அகண்ட பராயணமும், சமயப் பேரவையும் நடைபெற்று; இரவு வெள்ளி ரதத்தில் கயிலை திருவுருவப் படம் வீதியுலாக் காட்சி நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகள், பாதயாத்திரைப்போல் பக்தகோடிகளுடன் நான்கு வீதியும் நடந்தே வலம் வந்தார்கள்.

- (எமது சிதம்பரம் நிருபர்)

ஸ்ரீ மா. பாலசுப்பிரமணியன்

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி — யாழ்ப்பாணக் கிளைச் சபையின் ஆதரவில்

# பாடசாலைகளில் - திருக்கேதீச்சர வாரம்

## 23-7-71 — 29-7-71 நாட்களில்

யாழ்ப்பாணப் பகுதியில் நிதி திரட்டுதல்

அன்புடையீர்!

சமுகத்தில் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றான திருக் கேதீச்சர ஆலயத் திருப்பணி வேலைகள் பற்றித் தாங்கள் அறிந்திருப்பீர்கள். இப்பொழுது இத் திருப்பணி முக்கிய கட்டத்தை அடைந் துள்ளது. இங்கு யூன்மாதம் 6 ஆம் திகதி பாலஸ்தாபனம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து பழைய சுவாமி கோயிலும், அம்பாள் கோயிலும் இடிக்கப்பட்டுப் புதிய கோயில்களுக்கு அத்திபாரமும் வெட்டப்பட்டுள்ளது. இவ் வேலைகள் சிரமாதன முறையில் நடைபெற்றன வென்பது குறிப்பிடத் தக்கது. புதுக்கோயில்களுக்கு ஆவணி மாதம் 11 ஆம் திகதி (27-8-71) அதிகாலையில் அத்திபார மிடுவதெனத் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையார் திருவருளை முன் னிட்டுத் தீர்மானித்துள்ள னர்

இத் திருப்பணி நிறை வேறுவதற்கு இன்னும் மூன்று லட்சம் ரூபாய் வரையில் தேவைப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் பொருள் சேகரிப்பதற்கென ஒரு கிளை தாபிக்கப்பட்டு இயங்கி வருகிறது. இக்கிளை யாழ்ப்பாணப் பாடசாலைகள் இத் திருப்பணிக்குத் தங்கள் பங் கைச் செலுத்துவதற்கு வசதி செய்து கொடுக்கும் நோக்கத்தோடு, இம் மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரைக்கும் உள்ள வாரத்தைத் திருக் கேதீச்சர வாரமாகக்கொள்ள ஒழுங்கு செய்துள்ளது. இவ் வாரத்தில் மாணவர்களுக்குத் திருக்கேதீச்சர ஆலயத்தின் சிறப்பையும், திருப் பணிக்கு உதவி செய்ய வேண்டிய அவசியத்தையும் விளக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். மேலும் ஆசிரியர் தம்மாலியன்ற பொருள் உதவி செய்வ தோடு, மாணவர் ஒவ்வொரு வரிடமிருந்தும் 50 சதத்துக் குக் குறையாமற் சேகரித்துச் சேகரித்த பணத்தையும், பணஞ் சேகரிக்கும் பத்திரத் தையும் திரு. இ. சபாலிங்கம் அவர்களுக்கு (அதிபர் இந் துக்கல்லூரி, யாழ்ப்பாணம்) 1-8-71 க்கு முன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்

"இவ் விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்து விடும் இதை நீங்கள் எல்லீரும் சிந்தித்து இத் திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின், அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக் கிரகஞ் செய்வர்."

— நாவலர்.

தி. முருகேசம்பிள்ளை
தலைவர்,
யாழ்ப்பாணக்கிளை

ச அம்பிகைபாகன்
காரியதரிசி, யாழ். கிளை

இ. சபாலிங்கம்,
பாடசாலைகளில் பொள்சேர்க்கும்
குழுத் தலைவர்.

# "பழமை பாடிச் செழுமை தேடு"

## விபுலானந்த அடிகவாரின் நினைவுக் கட்டுரை

[இக் கட்டுரை சுவாமிகள் துறவு பூணுமுன் உருத்திரோற்காரி ஸூ ஐப்பசி மாதம் 'குமரன்' என்னும் சஞ்சிகையில் வெளி வந்தது. உதவியவர் சுவாமிகளுடைய ஆசியைப் பெற்றுள்ள பெரியார் திருகோணமலை திரு. மா. பீதாம்பரன் அவர்கள்,]

நமது பண்டைநாட் சிறப்பை நமது செல்வக் குழந்தைகளுக்குப் போதித்து வைத்தல் வேண்டும். குமரி முதல் இமயம் வரையிலுமுள்ள நாடனைத்தினையும் வென்று மணிமுடி சூடி ஆழி வேந்தனாக அரசு புரிந்த சோழன் கரிகாற்பெருவளத் தானது திருவளத்தைத் தமிழ்நாட்டுச் சிறுவரனைவ ரும் அறிதல் வேண்டும். அண்டினூர்க் கன்பனாய் மாங்குடி மருதனார் இயற்றிய தீஞ்சுவை மதுரைக் காஞ்சித் தலைவனாக விளங்கிய தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனது பெருஞ் சிறப்பினை நம் செல்வச் சிறுவர்கள் அறிதல் வேண்டும். பாரதப் போர் நடந்த காலத்தில்; பாண்டவர் துரியோதனாதியார் என்னும் இருவகையார் சேனைக்கும் பெருக உணவளித்த உதியன் சேரலானது பதியும் தமிழ்நாடே என்னும் உண்மையினை நம்பாலியர்க் குச் சொல்லி வைக்க வேண் டும். மீனக்கொடியும், விற்கொடியும் புலிக் கொடியும் பறக்கக் காணப்பேரெயில கத்தும், கரியாற்றினும், தகடூரினும் பொருது புறங் காட்டாது வீழ்ந்த பெருமக் களுக்குரியநாடு இந்தத்தமிழ் நாடு என்பதை நமது தவ மைந்தர் அறிதல் வேண்டும்.

"கைவேல் களிற்றொடு
போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"

என்று நாயனார் புகழ்ந்துரைத்தது நமது தமிழ்நாட்டு வீரரை யென்பதை நமது தெய்வக் குழந்தைகளுக்கு நினைப்பூட்டி வைக்க வேண் டும். தமிழ் நாட்டிலிருந்த ஒரு வீரத்தாய் தனது மைந் தனைப்பற்றிச் சொல்லுகிற ஓர் உறுதியுரையைச் சற்றுச் செவிசாய்த்துக் கேட்போமாக:

,ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே, சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே 'வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே, நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே, ஒளிறு வாளருஞ்சமம் முருக்கிக் களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

x x x

"பயம்" என்பது இன்னது என்று அறியாதிருந்த நெல்சனுடைய சரித்திரம்போன்ற சரித்திரங்களை நமது பாலியர்கள் அறிந்திருக்கவேண் டும்.

நமது கண்மணி போன்ற சிறுவர்களுடைய கல்வி விஷயத்தில் நாம் இப்பொழுது எடுத்துக் கொள்ளுகிற சிரத் தையைப் போலப் பதின் மடங்கு அதிகமாகிய சிரத் தையுள்ளோமாய், அதற் காகவேண்டிய பொருள்களைச் செலவிடுவதிற் சிறிதும் பின்னில்லாதவர்களா யிருத் தல்வேண்டும். நாம் உயிர் வாழ்வது எதற்காகவென்று ஆராய்ந்து பார்ப்போமாயின் நமது ஆன்மலாபத்துக்காக வும் நமது அருமைச் சிறுவர் களை மேல்நிலையில் வைத்தற் குமே யென்பதை அறிந்து கொள்வோம். உண்மையறி வினைக் கொடுக்காது நமது சிறுவர்களுக்குப் பொருளினைத் திரட்டி வைத்து விட்டுப் போவோமாயின், அப்பொருள் அவர்களுக்குத் தீமையை விளைக்குமேயன்றி ஒருவகை நன்மையையும் பயவாது. ஆதலால் சின்னஞ் சிறு வயதினராகச் சிற்றிலிசைத்து விளையாடிக்கொண் டிருக்கிற காலத்திலேயே நமது சிறுவர்க்கு நமது முன் னோரின் பெருமையை யுணர்த் திவைக்கவேண்டும். "நான் தமிழன்; தெய்வத் தமிழ் நாட்டிற் பிறந்தவன்; எனது மூன்னோர் மிகுந்த வீரம் படைத்தவர்கள்; போரிற்

வளர்ச்சி 2ம் பக்கம்


## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M B 11083

சுப்பையா நல்லையாவின் கைம்பெண் பவனியம்மா, வட்டுக் கோட்டை கிழக்கு, தானுகவும்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 2275-ம் இலக்கத் தத்துவ வழக்கில் தன் இறந்த கணவன் வட்டுகோட்டை கிழக்கு சுப் பையா நல்லையாவின் தத்துவகாரியாகவும் —வழக்காளி

எதிராக

(1) சுப்பையா ஆசைப்பிள்ளையும் பெண்
(2) கண்மணியம்மாவும் இருவரும்
வட்டுக்கோட்டை கிழக்கு — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 11083-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விவரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம் ஸூ ஆவணி மீ 26-ம் உ (26-8-71) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற் கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபாய் 11415-10 சதமும் 30-8-69 தொடக் கம் 27-1-70 வரைக்கும் ரூபாய் 8000/-க்கு 8 வீத வட்டியும் அதன் பின் இறுக்கும்வரை முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட் டுச்செலவு ரூபாய் 577-56 சதமும் இதில் கோட்டுச்செலவில் கொடு பட்ட ரூபாய் 500/- குறைக்கப்படும்,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக் கிறை "நீலபாலன்கலட்டி" வரகுச்செய்கை நிலப்பரப்பு 4 (4 Lms V. C.) ம், 6 குளியும் (6 Kls. இதில் வடக்குப் பக்கமாக வரகுச் செய்கை நிலப்பரப்பு 2 (2 Lms V. C.) ம் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் கிணற்றில் மிச்சக்காணிக்குரிய பங்கும் வழிவாய்க் கால் பாவிப்புரித்தும் பிறநீங்கலாகவும். எல்லை கிழக்கு மயில் வாகனம் நவரத்தினமும் மற்றையோரினதும் ஆதனம். வடக்கு முருகேசு சண்முகமும் பெண் சின்னம்மாவினதும், நாகமணி இராசையாவும் பங்காளரினதும் ஆதனங்கள். மேற்கு முருகர் கந்தரின் உரிமைக்காரரின் ஆதனம், தெற்கு சுப்பையா ஆசைப்பிள்ளையும் பெண் கண்மணியம்மாவுக்கும் உரிய மிச்சக் காணி.

க. சரவணமுத்து,
கொமிசனர் & விலைமதிப்பாளர்

173, குருசோ வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம், 21-7-71

எம். 175 30-7-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு. இல: M B 11444

நாகலிங்கம் கோபாலசிங்கம், 144 ரெம்பிள் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். —வழக்காளி

எதிராக

1 கதிரித்தம்பி கந்தையா அவரது மனைவி
2 தெய்வானைப்பிள்ளை, வேளாதோப்பு, புதிய செம்மணி ரோட் நல்லூர் யாழ்ப்பாணம். — எதிராளிகள்.

யாழ்ப்பாணம்டிஸ்திறிக் கோட்டின் M B 11444 -ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ஆம் ஸூ ஓகஸ்ட் மாதம் 27-ம் திகதி (27-8-71) வெள்ளிக்கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிர சித்த ஏலத்தில் என்னால் விற்கப் படும்.

தீர்வைத் தொகை: மூதல் வட்டி ரூபா 960ம் 5-2-1970 தொடக்கம் 2-9-1970 வரைக்கும் ரூபா 650/க்கு 12 வீத வட்டியும் அதன் முழுத்தொகைக்கும் இறுக் கும்வரை 5வீத வட்டியும் கோட் டுச் செலவு ரூபா 263/80.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் கிழக்குப் பிரிவு கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்கு இறை 'திடலை வயல்' வயற் பரப்பு 20- எல்லை கிழக்கு கார்த்திகேசு பொன்னை யாவின் உரிமை ஆதனம். வடக்கு குட்டிப்பிள்ளை நல்லதம்பி யின் ஆதனம். மேற்கு சிதம்பர நாதனின் கைம்பெண் விசாலாட் சியினதும் மற்றவர்களினதும் ஆதனம். தெற்கு இராசையா வின் மனைவி தங்கம்மாவின் ஆத னம்' பதிவு இல. K 224/49

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும், மதிப்பாளரும்
நாவேந்திரமடம்,
வட்டுக்கோட்டை. 21-7-71.

எம். 174 30-7-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B 6930

வட்டுக்கோட்டை, சரவணமுத்து குமாரசாமி கைம்பெண் வள்ளியம்மைப்பிள்ளை —வழக்காளி

எதிராக

வட்டுக்கோட்டை கிழக்கு; ச. விசுவலிங்கம் நடராசா —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 6930-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1971-ம் ஸூ புரட்டாதி மீ 16-ந் உ வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 2610/-ம், 15-9-64 தொடக்கம் 23-6-70 வரைக்கும் ரூபாய் 1500/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 846-18 அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 759-79; வெலியாத்துச் செலவு ரூபாய் 54-62; இனிமேல் வரும் செலவு ரூபாய் 32-07

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு டிவிசன் வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட் டைக் கிழக்கு இறை "அரவியற்தறை" பர. செ. இலா 8 குளி 10½ கிணற்றின் பங்கும், எல்லைகள்:

கிழக்கு: — வேலர் பெண் பாரியினுடையதும் பங்காளர்சளி னுடையதும் ஆதனம், வடக்கு: — சங்கானை கிராமத்தின் எல்லை, மேற்கு: — சின்னத்தம்பி மாரிமுத்துவினுடையதும் காலஞ்சென்ற S. விசுவலிங்கத்தினுடையதும் ஆதனங்கள், தெற்கு:— ஒழுங்கை. இதடங்கலும், உள்ளதும் உடையதும், பதிவு இல: E. 220/2

2. ஷை வட்டுக்கோட்டை கிழக்கு 'அரவியந்தை' பர. செ. இலா, 6ம் (ஆறு) குளி 1½, வடபக்கமாய் இருக்கும் கிணற்றில் பங்கும், எல்லைகள்:

கிழக்கு: — காலஞ்சென்ற S. விசுவலிங்கத்தின் ஆதனம் முதலாம்கடனுளி., வடக்கு: — மாரிமுத்து பெண் தெய்வானைப் பிள்ளையின் ஆதனம், மேற்கு: — தண்ணீர் வாய்க்கால் தெற்கு:—ஒழுங்கை இதில் பிரிவிடாத ½ பங்கு ப. இ. E 317/214

107, பெரியதெரு,
யாழ்ப்பாணம்,
31—7—71

எ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
வெர்நீஸ் கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

எம். 173 30-7-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M B 4231

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

ருஜசிங்கம் ஆதித்தபிள்ளை கட்டுடை
1, தம்பிப்பிள்ளை றட்ணருஜா
2. பெண் ருஜமனோகரி, கட்டுடை
—பதில் வழக்காளிகள்

எதிராக

1. கந்தையா குமரய்யா கொக்குவில் கிழக்கு
2. கனகரட்ணம் பெண் மங்கையற்கரசி
3, கனகரட்ணம் கட்டுடை
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் M B 4231-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1971-ஆம் ஞூ புரட்டாதி மாதம் 17-ந் திகதி (17-9-71) காலை 9 மணியளவில் (வெள்ளிக்கிழமை) அக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் என்னுல் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-

முதலும் வட்டியும் ரூபா 8,035/- இன்னும் ரூபா 6,500/-க்கு 1-9-61 தொடக்கம் 19-8-1963 வரைக்கும் 12 வீத வட்டியுங் கூட்டிக் கூட்டிய தொகைக்கு 19-8-1963 தொடக்கம் முழுப் பணம் இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கூடக் கோட்டுச் செலவு ரூபா 782-65 சதமும். (ஏற்பட்ட செலவு ரூபா 591-61 ஜெவிமாத்துச் செலவு 97-32 இனிமேலேற்படுஞ்செலவு 93-72)

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும் வண்ணூர்பண்ணைகோவிற்பற்று வண்ணூர்பண்ணை வடமேற்கிறை "காரைக்காடு" பர. நில. லா 4 குழி 5·2 இது யாழ்ப்பாண மாவட்டக் கோட்டின் P. 763-ம் வழக்கில் ஆணைக்கப்பட்டதும் கலாந்தா மேஸ்தர் T. கந்தையாவால் 1968ம் ஞூ ஆவணி மாதம் 4ம்திகதி 1457A இலக்கத்தில் விதாரிக்கப்பட்டதுமான படத்தில் 2ந் துண்டு கிணற்றில் அரைவாசியும் எல்லை கிழக்கு மேலே சொல்லப்பட்ட படத்தின் 1ம் துண்டு, வடக்கு மேலே சொல்லப்பட்ட படத்தின் 1ம் துண்டு மேற்கு செல்வரட்ணம் பெண் பரமேஸ்வரிக்குரிய ஆதனம், தெற்கு ஆறுமுகம் சதினவேலும் ஒழுங்கையும் இதடங்கலும்.

தா. க. பொன்னுத்துரை J.P.
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"அகிலகம்" 28/1, யாழ் வீதி, யாழ்ப்பாணம். 22-7-71
எம். 168 30-7-71.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

அரியாலை யாழ்ப்பாணம் செல்லப்பா கனகசபை —வழக்காளி

எதிராக

வழ இல: M B 11216

1. அரியாலை யாழ்ப்பாணம் சொககலிங்கம் கனகலிங்கம், 2. ஷை யூர் பெண் அன்னலெட்சுமி
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11216-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி என்னுல் 1971-ம் ஞூ ஆவணி மாதம் 25ம் திகதி புதன் கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை :— முதல் வட்டி ரூபா 2766-66ம் ரூபா 2000/-க்கு 26-10-1969 தொடக்கம் 2-6-1970 வரைக்கும் 12 விகிதமுள்ள வட்டியும் அதன்மேல முழுத்தொகைக்கும் இறுக்கும்

வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 372-80 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியாதெரு இறை "சாவகேகாரன் புலம்" பர நி. இலா. இரண்டரை (பர. நி. இலா. 2½) வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு இராசையா பெண் யோகம்மாவிற்குரிய ஆதனம், வடக்கு முருகேசு பெண் மரகதத்திற்குரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை தெற்கு மயில்வாகனம் பெண் கண்மணிக்குரியவாதனம். இதடங்கலும் ஆறுல் குறித்த கிணற்றில் வடக்கெல்லைக்காணிக்குரிய பாகம். தூர்வை வழி வாய்க்கால் பிறநிங்கலாக.

வை. ஏரம்பமூர்த்தி
Commissioner of Sales, Valuer
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
காரைநகர்.
1971ஞூ ஆடி மீ 16ம் திகதி
M. 170 26—7—71

# திருத்தொண்டத் தொகைக்கு முதல்வர்

[ ஆசிரியர் திரு. செ. சின்னத்துரை, ஏழாலை, சுன்னாகம்.]

(முன் வளர்ச்சி — 2)

பெரியபுராணம் ஒப்பற்ற தனிச்சிறப்பு வாய்க்க ஓர் காவியம். சுந்தரமூர்த்திசுவாமிகள் இக் காவியத்திற்கு கதாநாயகனாக விளங்கினர்.

சேக்கிழார்சுவாமிகள் புராணத்தை 13 சருககங்களாகப் பிரித்துள்ளார். ஒவ்வோர் சருகக முடிவிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் சேக்கிழார்சுவாமிகள், அவற்றுள் ஒன்று,

"தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகை முன்பணித்த திருவாளன் வாசமலர் மென்கழல் வணங்கவந்த பிறப்பை வணங்குவாம்"

என்று கூறியுள்ளார்.
இன்னும் சில பின்வருமாறு;

1 "ஏழுலகும் வணங்கு பெருந் திருவாரூர்க் குளத்திலெடுத் தார் வினையின் குழிவாய்நின் றெனை எடுத்தார்"

2 "முடியாப் பேறுபெற்றூர் தங் கழல்பரவ அடியேன் முன் னைப் பிறவியினிற் செய்த தவம் பெரியவாமே"

3 "முதலைவாய் நின்றும் மீட் டார் கழல்கள் நினைவாரை மீளாவழியின் மீட்பனவே"

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சரித்திரத்தின் சுவையைப் போல் அவர் தேவாரங்களிலும் ஒரு தனிச் சுவையும் ஆற்றலும் ஒப்பற்ற சிறப்பும் மிளிர்கின்றன. மனைவி மக்கள் செல்வம் உற்றூர் உறவினர் என்ற பந்தங்களினுல் கட்டுண்ட நாம் யாக்கை நிலையாமை செல்வம் நிலையாமை முதலியவற்றை நன்கு உணரவேண்டும். இந்தப் பொய்ச்சார்பை விடுத்து இறைவனின் உறவாகிய மெய்ச்சார்பை உணர்ந்து நாம வாழவேண்டும். சார் புணர்ந்து சார்பு கெட நாம் வாழவேண்டும். அந்நிலையில்தான் நாம் நிலையுள்ள இன்பத்தை நாடுவோம். இந்த உண்மையைப் பற்பல இடங்களில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுகிறுர் அவற்றிற் சில பின்வருமாறு:

1. "ஊன்மிசை உதிரக்குப்பை"
2. "தோற்ற முண்டேல் மரணம் உண்டுதுயர மனை வாழ்க்கை"
3. "செத்தபோது ஆருமில்லை சிந்தையுள் வைமின்கள்"
4. "நல்வாயில் செய்தார் நடந்தார், உடுத்தார் நரைத்தார் இறந்தார் என்ற நானிலத்தில் சொல்லல் [illegible] தந்நடியேன்"

இறைவனே [illegible] என நிலையாயுள்ளார் [illegible]; அவரையடைந்து இன்பம் எய்துவதே மானிட வாழ்க்கையிற் [illegible] என்று பற்பல இடங்களில் சுந்தரர் கூறுகிறுர் எம்பெருமானின் திருவடி உணர்வோடும செய்யப்படும் அகபூசையும் புறப்பூசையும் இனபம் எய்துவிப்பன.

"இலையால் அன்பால் ஏத்துமவர்க்கு
நிலையா வாழ்க்கைச்
சோற்றுக் துறையே"

என்றும்,

"தலையால் காழுந்தவத்
தோர்க்கென்றும்.
தொலையாச் செல்வத்
சோற்றுத் துறையே"

என்றும்,

"காலைஎழுந்து தொழுவார்
கவலைகளைவாய்"

என்றும்,

தொழுகையைப்பற்றி மிகவும் ஆணித்தரமாக தமது செந்தமிழில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறியுள்ளார். மெய்யன்போடு பாடுவாக்கும் பணிவார்க்கும் எம்பெருமான் அருள்புரிவார்.

"பாடுவார் பசிதீர்ப்பார்
பரவுவார் பிணிகளைவாய்"

என்பது சுந்தரரின் செந்தமிழ்வாக்கு.

சகல பிரச்சினைகள் உள்ள தற்கால தமிழ் மக்கள் இம் மணிவாக்கை உணர்வார்களாக.

பிறவிக்கடலை நீந்துவதற்கு பஞ்சாட்சரம் ஓர் தெப்பம் போன்றது.

"பரவி நாளும்
பணிந்தவர் தம்வினை
அரவையாசத் துடைப்பவர்
தம்மிடம்"

என்று அப்பர் சுவாமிகள் கூறுகிறுர். பஞ்சாட்சார செபஞ் செய்தால் முன்வினை அற்றுப் போகும். பெரொளியும் ஞானமும் உதயமாகும்.

"அந்தியும் நண்பகலும்
அஞ்சுபதஞ் சொல்லி
முந்தி எழும்பழைய
வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியத்
தென்திருவாரூர்புக
கெந்தைபிரானுரை
என்றுகொல எய்துவதே"

என்பது சுந்தரமூர்த்திகள் செந்தமிழ் வாக்கு. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரங்களை நாடோறும் ஓதி இன்புறுவோமாக.

| இந்துசாதனம் | |
|---|---|
| திருத்திய வருடசந்தாவிகிதம் | |
| உள்நாடு | |
| ஆங்கிலம் | 10-00 |
| தமிழ் | 10-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-00 |
| வெளிநாடு | |
| ஆங்கிலம் | 12-00 |
| தமிழ் | 12-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 18-00 |

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ. இல: M B 9107

1. முருகுப்பிள்ளை பாலகிருஷ்ணன், நீர்வேலி வடக்கு
—வழக்காளி

எதிராக

1. வைரவப்பிள்ளை வல்லிபுரமும் பெண்
2. இலங்கைநாயகி. இணுவில்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9107-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1971-ம்ஆண்டு ஆவணிமீ 26-ந் திகதி (26-8-71) வியாழக்கிழமை மூற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று என்னுல பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3865/-ம், 25-5-67 தொடக்கம் 23-5-70 வரைக்கும் ரூபா-3000/க்கு நூற்றுக்கு வருஷம் 10 வீத வட்டியும் பின்திகதி தொடக்கம் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு வருஷம் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 373ம், 42 சதமும்

### ஆதன விபரம

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவில்பற்று சங்குவேலி "ஓடைவயல்" [illegible] செய்கை 7½ (7½ Lms V. S.) கிணறும் மேற்கெல்லைக் காணியிலுள்ள கிணற்றில் இதற்குரிய பங்கும். வழக்கம்போல் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கு முருகர் கல்லையாவினுடைய காணியும், வேறு ஒரு காணியும் எல்லை வடக்கு இருஷ்ணரின் பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம் எல்லை மேற்கு செல்லத்துரையின் பெண் சின்னத்தங்கச்சியின் ஆதனமும் வாய்க்கால் முகப்பும். எல்லை தெற்கு பெரியதம்பி சின்னத்தம்பியின் ஆதனம். இதடங்கலும்.

2. மேற்படி கந்தரோடை 'சங்காவத்தையும் பொல்வத்தையும்' விலப்பரப் வரகுச் செய்கை ஐந்து (5 Lms V. C.) பயிருடன் எல்லை கிழக்கு செல்லையாவின் பெண் நாகமுத்துவின் ஆதனம், எல்லை வடக்கு வின்சிலோவின் மைப் பெண் செல்லத்தின் ஆதனம், எல்லை மேற்கு வைரமுத்து சவரியின் ஆதனம். எல்லை தெற்கு வைத்தீஸ்வர ஐயரின் பெண் செல்லம்மாவின் ஆதனம், இது மூழுவதிலும் பிரிக்கப்படாத விலப்பரப்பு வரகுச் செய்கை இரண்டு இதன் உரிமைகளும் இதைச் சார்ந்தவைகளும்.

நித்தியகல்யாணி" அ. சிவானந்தன்
பலாலி ரேட், கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
24—7—71 எம். 171 30—7—71

## கோட்டு விற்பனவு விளம்பரம

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

எழுவைதீவு, அம்பலவாணர் சின்னத்தம்பி —வழக்காளி

வழ. இல: M B 9391

எதிராக

நயினுதீவு. தற்போது யாழ்ப்பாணம் கண்டுக்குளி, பாண்டியன்தாழ்வு ஒழுங்கை. 16-ம் இலக்கத்தில் வசிக்கும்,
1. முருகேசு கந்தையாவும் பெண்
2. விசாலாட்சியும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9391-ம் இலக்க வழக்கில் எனகிலுக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிகப்படும் இருதுண்டுக்காணிகள் 1971 ம் ஆ செப்டெம்பர் மீ 14 உ (14-9-71) செவ்வாய்க்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4000/- இன்னும் ரூபாய் 2000/-க்கு 5-9-1967 தொடக்கம் 6—9—1969 வரை 12 வீத வட்டியும் கூட்டிய தொகைக்கு இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 467-80 இதில் ரூபா 200/- கழிபடவேண்டும்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் [யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி நயினுதீவுக் கோவிற்பற்று நயினுதீவு இறை "பெரியபுலம்" வி. பர. (6) ஆறும், வீடும்; கிணறும், செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு கனகசபை இராமச்சந்திரனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு கீழ்ககாணும் ஆதனமும், மறுபேருக்குமுரிய ஆதனமும், மேற்கு பாலசுந்தரம் பெண் பாறுபதியினுதனம் தெற்கு சின்னத்தம்பி மாரிமுத்துவுக்கும் குலசேகரம் பெண் கண்மணிககுமுரிய ஆதனங்கள். பதிவு இலக்கம்: யாழ்ப்பாணம். C. 206/262

2. ஷை நயினுதீவு இறை 'கச்சுப்புளி" வி. பர. 12 பனைகளும் எல்லை கிழக்கு நமசிவாயம் பெண் வள்ளியம்மைக்கும் சிவசுப்பிரமணியம் பெண் நாகேஸ்வரிக்குமுரிய ஆதனங்கள், வடக்கு சரவணமுத்து மகள் உமா மகேஸ்வரிக்கும் நாராணபிள்ளை செல்லையாவுக்குமுரிய ஆதனங்கள், மேற்கு ஒழுங்கை தெற்கு மேற்கூறிய முதலாம் ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் வி. பர 8 குளி ½ பதிவு இல: யாழ்ப்பாணம் C 316/176

S இரத்தினசபாபதி J. P.
அமேரிகன் மிஷன் ரோட், கொமிசனரும், விலைமதிப்பாளரும்
கொண்டைவ, 25-7-71 எம் 169 30-7-71

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணூர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 30—7—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்